மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினை மீது பேரவைத்தலைவர் தீர்ப்பு அளித்த பிறகு அதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வது தான் முறையேயொழிய அதன்மீது விவாதத்தை எழுப்புவது முறை அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையின் நடவடிக்கைகுக் குந்தகம் ஏற்படாமல், கண்ணியக் குறைவு ஏற்படாமல், விதிமுறைகளை ஒழுங்கு முறைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.
சிவகாசியில் நெல் மண்டிகள் கதவடைப்பு.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: கனம் பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள, சிவகாசியில் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் சிலர் பதுக்கி வைக்கப்பட்ட நெல்லைக் காட்டிக்கொடுத்து, அதன்பேரில் பதுக்கி வைக்கப்பட்ட நெல் கைப்பற்றப்பட்டது என்ற காரணத்திற்காக, மண்டிகளை மூடி, நெல் வியாபாரத்தை நிறுத்தி, அப்பகுதி மக்களைப் பட்டினியால் பரிதவிக்கவிட்டு, அதன்மூலம் கழக ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன், சிவகாசியில் உள்ள வணிகர்கள், அங்குள்ள எல்லா மண்டிகளையும் கடந்த ஆறு தினங்களாக மூடிவிட்டதால், சிவகாசியிலும் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமப் பகுதியிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள், உணவு கிடைக்காமல் பரிதவித்துப் பஞ்சத்தின் பிடியில் அகப்பட்டுள்ளார்கள். அதனால் அங்கு பெரும் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மற்ற இடங்களுக்கும் பரவலாம். இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விஷயத்தை விவாதிக்கவும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுகிறேன்" என்ற தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரால் குறிக்கப்பட்டுள்ள காரியம் அரசினரின் அன்றாட சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டு இருக்கிறது. இரண்டாவது, கவர்னர் உரையின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இதுபற்றிப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களுக்காகவும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் பேரவையின் 41-வது விதிப்படி கொடுத்துள்ள அறிவிப்பு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் அதற்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன்.

1967, மார்ச் 29

சாத்தனூர் தலைக்கால்வாய் உடைப்பும், தண்டராம்பட்டு தொகுதியில் பயிர்ப் பாதிப்பும்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சகாதேவ கவுண்டர் அவர்கள் சட்டசபை விதிகளின் 41-வது விதியின்கீழ் தாம் கொடுத்துள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கே. சகாதேவ கவுண்டர்: அவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியில் சாத்தனூர் அணைக்கட்டின் தலைக் கால்வாய் உடைந்து விட்டதால் சுமார் 20,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்துள்ள நஞ்சை, புஞ்சைப் பயிர்கள் வாடி வதங்கி யுள்ளன. இதனைத் தடுக்க உடனடியாகச் செய்ய வேண்டிய நிவாரண வேலைகள் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: அவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் தலைக்கால்வாயில் விடப்பட்ட நீரளவு தேவைக்கேற்ப அதிகரிக்கப்பட்டது. 17—3—1967 அன்று காலை 6 மணி அளவில் அக்கால்வாயில் 1 மைல் 7 பர்லாங்கு தொலைவில் 20 அடி உயர்முள்ள கரையில் வலது பாகத்தில் 50 அடி நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டது. உடைப்பினை மூடிட உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டது. 21-3-1967 அன்று தலைமைப் பொறியாளர் உடைப்பு ஏற்பட்ட இடத்தை நேரில் பார்வையிட்டு, பழுது பார்க்கும் பணி திருப்திகரமாக நடைபெற்று வருகிறதென அறிந்தார். இவ்வேலை 26-3-1967 அன்று முடிவடைந்தது, பாசன நீர் கட்டுப்படுத்திய அளவில் வழங்கப்பட்டு வருகிறது. கரை மேலும் வலுவடைவதுடன் நீர் வழங்கல் படிப்படியாக அதிகரிக்கப்படும். கிடைத்த தகவலின்படி பாசனம் பெறும் நஞ்சை நிலம் 7,431 ஏக் கரும், புஞ்சை 13,148 ஏக்கரும் ஆகும். புஞ்சைப் பயிர் பெரும் பாலும் அறுவடை ஆகிவிட்டது. இந்த உடைப்பினால், தற்போது பயிரிடப்பட்ட நிலங்கள் ஒன்றும் சேதமடையவில்லை. அண்மை யில் பெய்த மழை அப்பயிர்களுக்குப் பெரிதும் உதவியுள்ளது. இப்போதைய ஆணைக்கிணங்க 30-4-1967 வரை வினியோகம் நீடிக்கும். ஆயினும் தேவையிருப்பின், அதன்பின்னரும் போதிய காலத்திற்கு வினியோகம் நீடிக்கப்பெறும்.

6. அறிவிப்புகள்.

(அ) உள் சட்ட ஆய்வுக் குழுவினர் நியமனம்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, இந்தப் பேரவைக் குத் தரிவிக்கவேண்டிய ஓர் அறிவிப்பு உள்ளது. இந்தப் பேரவை யின் 209 (1) வது விதிக்கு இணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை